**செ. கு. எண்: 071** **நாள் : 17.08.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 17.8.2015

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சேஷசமுத்திரம் கிராமத்தில் தேர் திருவிழா தொடர்பாக 15.8.2015 அன்று இருதரப்பினருக்கு இடையே சட்டம் - ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்ட போது சிலர் வன்முறை செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வன்முறை செயல்களில் ஈடுபட்ட நபர்களை தடுத்த காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சங்கராபுரம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குழந்தைவேலு, முதல் நிலைக் காவலர்கள் திரு. பாலமுருகன், ராஜன்பாபு, திரு. சரவணன், விழுப்புரம் மாவட்ட ஆயுதப் படை காவலர்கள் திரு. ரஞ்சித்குமார், திரு. பரமேஸ்வர பத்மநாபன், திரு. யுவராஜ், திரு. சரவணன் மற்றும் வருவாய்த் துறையைச் சேர்ந்த வளையாம்பட்டி கிராம உதவியாளர் திரு. செல்வம், மஞ்சபுத்தூர் கிராம உதவியாளர் திரு. பாலுசாமி, கல்லேரிக்குப்பம் கிராம உதவியாளர் திரு. கணேசன் ஆகியோர் காயமடைந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்த வன்முறை சம்பவத்தில் காயமடைந்த காவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 50,000/- ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**